தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தி.கலைசெல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி

ஊடகச் செய்தி எண்.14/2017 நாள்.15-04-2017

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

விவசாயிகள் நிர்வாணம் ஒரு தேசிய அவமானம்!

மானம் காக்க

மீதமிருந்தது

அது ஒன்றுதான்

இன்று அதுவும்

அவிழ்க்கப்பட்டது!

கடந்த ஒரு மாதகாலமாக டெல்லியில் தமிழக விவசாயிகள் பல கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். ஊடகங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும், மத்திய மாநில அரசுகளிடமிருந்து பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் போன்ற முக்கிய கோரிக்கைகளுக்காக விவசாயிகள் போராடுவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால் சற்று உற்றுப்பார்த்தால் இந்த காரணங்களுக்காக மட்டுமே விவசாயிகள் தமிழகத்தை விட்டுவிட்டு டெல்லியில் கடும் குளிரிலும், சுடும் வெயிலிலும் இத்தனை நாட்களாக போராட வேண்டிய அவசியம் இல்லை என்பது விளங்கும். நாளுக்குநாள் நலிந்து கொண்டிருக்கும் விவசாயத் தொழிலை எப்படியாவது காப்பாற்றிட முடியாதா? அரசாங்கத்தை ஒரு பெரிய கொள்கை மாற்றத்திற்கு திருப்பி விவசாயிகளை தற்கொலைக பாதையிலிருந்து மீட்டிட முடியாதா? என்கிற ஆழ்ந்த கவலையின் வெளிப்பாடே இந்த உக்கிரமான தொடர் போராட்டத்திற்கு

காரணமாக இருக்க முடியும் என்பதை மெல்ல மெல்ல அனைவரும் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

டெல்லியில் அனைத்து மாநில போராட்டக்காரர்களின் வாழ்விடம் ஜந்தர்மந்தர். கடும் குளிருக்கும், சுடும் வெயிலுக்கும் அவ்வப்போது கொட்டும் மழைக்கும் அஞ்சாமல் கூடாரம்போட்டு பல மாதங்கள் கோரிக்கை பதாகைகளோடு உட்கார்ந்திருக்கும் போராட்டக்குழுக்கள் அங்கு உண்டு. எத்தனை மாதங்கள் போராடினாலும் அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ அவர்களை கண்டுகொள்ள மாட்டார்கள். சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் கூவம் கால்வாய்கரையோரம் நாள்தோறும் உண்ணாவிரதம் இருக்கும் பலதரப்பட்ட போராட்டக்காரர்களில் இதுவரை யாரையாவது மாநில அரசாங்கம் கண்டுகொண்டு கூப்பிட்டு பேசியதுண்டா? உரிமைக்காக போராடும் தன் மக்களை இப்படிப்பட்ட நிலைகளில் இப்படிப்பட்ட இடங்களில்தான் ஒதுக்கியிருக்கிறது இந்திய ஜனநாயகம்.

யாருமே கண்டுகொள்ளாத இடத்திலிருந்துதான் தமிழக விவசாயிகள் போராட்டத்தைத் துவக்கினர். அரசின் கவனத்தை தம்பக்கம் ஈர்ப்பதற்காக அவர்கள் பலவிதமான போராட்டங்களை நடத்தினர். சட்டையணியாமல் போராட்டம், அரை மொட்டையடித்து போராட்டம், சிரசாசன போராட்டம், தியானப் போராட்டம், எலி தின்னும் போராட்டம், பாம்புகறி தின்னும் போராட்டம் இப்படி பலப்பல போராட்டங்களை அவர்கள் நடத்தினர். மெல்ல மெல்ல அரசியல்வாதிகள் முதல் நடிகர்கள் வரை பிரபலங்கள் பலரும் அவர்களுடைய போராட்டத்தை நேரில் சென்று ஆதரிக்க, தமிழகம் மட்டுமின்றி இந்திய ஊடகங்கள் பலவும் அவர்கள் பக்கம் திரும்பின. யார் திரும்பி என்ன? பிரதமரும், விவசாய மந்திரியும் மட்டும் இது நம்தேசத்தின் ஒட்டுமொத்த பிரச்னை அல்ல என்பதைப் போல அதைப் பொருட்படுத்தாமல், அவர்களை அழைத்துப் பேசுவதை அவமானகரமான செயலாக கருதிக்கொண்டு பசுவதைச் சட்டத்தை இந்தியா முழுவதும் எப்படி நிறைவேற்றுவது என்பதில் தீவிரம் காட்டி வருவதை நாடே அருவெறுப்புடன் பார்த்து வருகிறது. அதேபோல் தமிழகத்தின் முதலமைச்சர் தலைநகர் டெல்லியில் மாநில உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் விவசாயிகளை இன்றுவரை சென்று பார்க்கவில்லை என்பதுடன் அவர்களுக்கு ஆதரவாக அறிக்கை எதுவும் கூட வெளியிடாதது தமிழக அரசின் செயலற்ற தன்மையை வெளிக்காட்டியுள்ளது. ஆட்சியாளர்களின் இந்தச்செயல் இன்றைய அரசாங்கத்தில் விவசாயிகளைப் பற்றி யோசிக்க யாரும் இல்லை என்ற யதார்த்தத்தை வெளிக்கொணர்ந்துள்ளது.

அரசியல்வாதிகள் என்றாலே வாக்குறுதிகளுக்கு பஞ்சமிருக்காது. மோடி அவர்கள் 2014ல் தன் டிவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட கருத்தை ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது. "நம்முடைய விவசாயிகள் பிச்சை எடுப்பது கிடையாது. அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் அவர்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. அவர்கள் உழைப்பிற்கு மேம்பட்ட விலையை அவர்கள் பெற வேண்டும்" என்று கூறியிருக்கும் இவர்தான் தற்போது போரட்ட களத்தில் இருக்கும் அவர்கள் பிரச்னை என்ன என்பதைக்கூட கேட்க முன்வராமல் உள்ளளார். இவர்தான் 2014ல் கர்நாடகாவில் தேர்தல் பிரச்சாரம் செய்தபோது "நான் விவசாயிகளுக்காக கடுமையாகப் பாடுபடப் போகிறேன்" என்றார். இது கர்நாடகத்திற்கான வாக்குறுதியாகத்தான் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இன்னொரு நிகழ்ச்சியில் மோடி பேசுகிறார், "நாட்டினுடைய பொருளாதாரத்தை நாம் முன்னேற்ற விரும்பினால் விவசாயத்திற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்" என்று. மக்கள் இப்போது புரிந்து கொண்டிருக்கிறார்கள்

பிரதமர் மோடி எதற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார் என்று. அவர் கொடுக்கும் முன்னுரிமை எல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல்லாயிரக்கணக்கான கோடிகள் கடன் வழங்குவதும், பெரிய தொழிலதிபர்கள் ஏற்கெனவே பெற்ற கடன்களை தள்ளுபடி செய்வதுமேயாகும். சமீபத்தில் நெடுஞ்சாலையோரம் உள்ள மதுக்கடைகளை மூட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டவுடன் மது வியாபாரிகளின் அழுத்தத்தையடுத்து, அடுத்த சில மணி நேரங்களிலேயே இந்த உத்தரவை எப்படி எதிர்கொள்ளலாம் என்று கூடி முடிவெடுத்த மோடி, முப்பது நாட்களாக போராடி வரும் தமிழக விவசாயிகளை இதுநாள்வரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பது வெட்கக்கேடான விஷயம்,

பொதுவாகவே அரசாங்கங்கள், இதுபோன்ற போராட்டங்கள் வலுவடையும் போது போராட்டத்தின் முனையை உடைக்கும் வேலைகளை வெவ்வேறு தளங்களில் இருந்து மேற்கொள்ளும். ஒன்று ஒட்டுமொத்த போராட்டத்தையே திசை திருப்பப் பார்க்கும். அல்லது போராட்டத்தை தலைமை தாங்குபவரை தனிப்பட்ட முறையில் அசிங்கப்படுத்தி போராட்டகாரர்களுக்குள்ளேயே பேதத்தையும் பிரிவினையையும் வளர்க்கும். விவசாயிகள் போராட்டம் ஜந்தர்மந்தரில் நடக்கும் பல போராட்டங்களைப் போன்ற ஒன்றுதான் என்று பாஜக அதை முதலில் அலட்சியப்படுத்தியது. ஆனால் போராடும் விவசாயிகளின் விதவிதமான யுத்திகளால் ஊடகங்களின் ஒவ்வொரு திரையிலும், அரசியலின் ஒவ்வொரு தளத்திலும் அது விரிந்து படர்ந்து விவாதப் பொருளானபோது மோடி அரசு விழித்துக் கொண்டு மக்கள் மத்தியில் விவசாயிகளை கொச்சைப்படுத்தும் முயற்சியில் இறங்கியது. விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் அது அவர்கள் ஒழுங்கீனமாக நடந்துக்கொள்ள வழி வகுக்கும். வரி கொடுத்த மக்களின் பணத்தை தவறாகப் பயன்படுத்தியதாகும். பொருளாதார சிக்கல்களை உருவாக்கும் என்று ஒரு புறம் ரிசர்வ் வங்கியின் கவர்னர் உர்ஜித் படேல் மூலம் உரை நிகழ்த்த வைத்து விட்டு மறுபுறத்தில் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு மீது தனது தேசியத் தலைவர் ஹெச். ராஜா மூலம் "அய்யாக்கண்ணு ஆடி கார் வைத்திருக்கிறார், அவர் மணல் அள்ளுவோருக்கு வக்காலத்து வாங்கினார், அவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி." என்றெல்லாம் சகட்டுமேனிக்கு மலத்தை வாரி வீசியிருக்கிறது அது. பெரும்பாலான பெருமுதலாளிகள் வாங்கிய ரூ.6 லட்சம்கோடி வங்கிக்கடன்களை வாராக்கடன் என்று இந்த அரசு அறிவித்த போது ரிசர்வ் வங்கி கவர்னர் அதைப்பற்றி வாய்திறக்கவில்லை. அப்படி தள்ளுபடி செய்யப்பட்ட வாராக்கடன்கள் மக்களின் வரிப்பணம் இல்லை என்று சொல்ல முடியுமா ரிசர்வ் வங்கி கவர்னரால்?

ஆக, விவசாயி என்றால் எப்போதும் பஞ்சை-பராரியாகவே வாழ வேண்டும் என்ற எண்ணம் இன்னும் அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் விட்டு அகலவில்லை. நாம் ஒவ்வொரு வேளையும் உண்ணுகின்ற உணவுக்குக் காரணமான விவசாயிகளுக்காக இந்தியாவின் தலைநகரில் நடத்தப்படும் போராட்டங்களை - கையில் மண்டை ஓடுகளை ஏந்திக்கொண்டு, வாயில் எலிகளைக் கவ்விக்கொண்டு, கழுத்தில் தூக்குக்கயிறை மாட்டிக்கொண்டு, கோவணத்தைக் கட்டிக்கொண்டு போராடியும் ஒரு அரசாங்கம் திரும்பிப் பார்க்காமல் இருந்தால் விவசாயி வேறு என்னதான் செய்ய முடியும், நிர்வாணப்பட்டு நிற்பதைத் தவிர. அதையும் செய்து முடித்த பின்னும் அவர்களை அழைத்துப்பேச முன்வராத இந்த அரசாங்கம் தேசிய அவமானத்தின் சின்னம் என்றால் அது மிகையில்லை. தமிழக விவசாயிகள் டெல்லியில் பிரதமர் மோடியை நேரடியாக சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த தீவிர முயற்சிகள் மேற்கொண்டும் எந்தப்பயனும் ஏற்படாத நிலையிலேயே நிர்வாணப் போராட்டத்திற்கு உந்தப் பட்டிருக்கிறார்கள் என்பதை ஆளும் பிஜேபி அரசு உணர்ந்திருப்பினும், இன்னும் அது விவசாயிகளை அழைத்துப்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

பேசாமல் மீண்டும் மீண்டும் பொன்.ராதாகிருஷ்ணனை அனுப்பி தேன்தடவிய நயவஞ்சக பேச்சுக்கள்மூலம் போராட்டத்தை கைவிட வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதைப் பார்க்கும்போது ஆளும் பிஜேபி அரசு தமிழ்நாட்டையும் அதன் மக்களையும் மூன்றாம் தர மக்களாக முத்திரை குத்த நினைக்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது.

சென்றமுறை நடுவண் அரசு தமிழக மக்களின் கலாச்சாரத்தின் மீது கைவைத்து சூடுபட்டுக்கொண்டதை ஜல்லிக்கட்டு போராட்டம் என்றென்றும் நினைவு படுத்துவது போல இன்னொரு போராட்டத்தை விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் ஆதரவாக எடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் ஊழியர்களும் ஜல்லிக்கட்டு போன்றதொரு இன்னொரு உக்கிரமான போராட்டத்திற்கு தொடக்கப்புள்ளியாக இருந்து அனைத்துத் தரப்பு மக்களையும் மாணவர்களையும் இளைஞர்களையும் பெண்களையும் ஒன்றிணைத்து போராடி விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் அரசு செய்ய வேண்டிய அனைத்து சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுத்தர சபதமேற்க வேண்டும்.

இந்த சபதம் நிறைவேறும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெற தமிழக அரசு ஊழியர்கள் ஆதரவு அளிப்பார்கள். இப்போராட்டம் மீண்டும் ஒரு மக்கள் போராட்டமாக உருமாறும் என்பதில் ஐயமில்லை.

விவசாயத் தோழர்களே ஒன்றை நினைவிற் கொள்ளுங்கள்,

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை."

அரசு ஊழியர்களே ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்."

ஆட்சியாளர்களே ஒன்றை நினைவிற்கொள்ளுங்கள்,

"தேரோடும் சீமையிலே,
ரொம்ப திமிராக போறவரே
இவங்க ஏரோட்டம் நின்னுபோனா
உங்க காரோட்டம் என்னவாகும்?"

(மு. அன்பரசு)
பொதுச்செயலாளர்